# வ.சுப.மாணிக்கனாரின் பாட்டுத்திறன்

முனைவர் ம.பெ.சீனிவாசன்
சிவகங்கை

**தனி-ஏர் உழவர்**

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குத் தகும் உயர்வளித்த பெரும் புலமையாளர்கள் பலர். அவருள் முன்வரிசையருள் ஒருவராய் முன்மொழியத் தக்கவர் நம் மாணிக்கனார். தன்னொப்பாரில்லாத் தனித்தமிழறிஞர் அவர். அவரின் புலமைக்கூறுகள் பலவும் வியந்தோதத்தக்கவை. ஆழ்ந்து அகன்ற தனி ஆய்வுக்குரியவை. பழந்தமிழுக்கு முடிமணியாகத்திகழும் தொல்காப்பியத்திற் புதுமை கண்டவர் அவர். புதுமைக்கவி பாரதியிடத்தும் பழமையின் மரபுவேர்களைக் கண்டு காட்டிய சிறப்பும் அவருக்குண்டு. பாட்டு, தொகை முதலான சங்க நூல்களின் மீதான அவரின் பார்வை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது; தனி வீறு மிக்கது. உழுத சாலில் உழாமல் தனி ஏர் நடத்திய எழுத்து - ஏர் உழவர் அவர். சிலம்பு - மேகலை ஆகிய ‘இரட்டைக் காப்பிய’ங்களை அவர் அணுகிய விதமும் புதுமையானதே. **‘எந்தச்சிலம்பு?’** என்னும் கேள்வியின் மூலம் சிலம்பு பற்றிய முந்தைய ஆய்வுகளை அசைத்துப் பார்த்தவர் மாணிக்கனார். ‘கம்பர்’ என்னும் சிறு பனுவலில் - கவிச்சக்கரவர்த்தியின் காப்பியக் கடலை, ஒருகைப்பிடிக்குள் அடக்கிக்காட்டிய ‘குறுமுனி’ அவர். அந்த வித்தகத்தை - விந்தையை என்ன சொல்ல! ‘பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது’ என்ற திரையிசைப் பாடலைப் ‘பசியடநிற்றல்’ என்னும் தொல்காப்பிய நூற்பாவோடு(1215) பொருத்திக்காட்டிய புதுமைப் புலவர். காலந்தோறும் தோன்றிய தமிழ்இலக்கண இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள், தனிப்பாடல்கள் என நம் காலத்துக் கலைஞரின் குறளோவியம் உட்பட அவரின் ‘விமர்சன வெளிச்சம்’ பாயாத நூல் ஒன்றும் இல்லை. திருக்குறளில் ஆழங்காற்பட்டவர்; “அது கருத்து வகையால் உலகமக்கட்கெல்லாம் உரியது; எனினும் மொழிகாரணமாய் நமக்கு உறவுடையது” (வள்ளுவம் ப.263) என்று உரிமை பாராட்டியவர். திருமுறைகளில் - குறிப்பாகத் திருவாசகத்தில் அவருக்கிருந்த பெருவிருப்பம் அளப்பரியது. ஆழ்வார்களின் ஈரத்தமிழையும் அவர் நன்கு அறிவார். அவர் படைத்த தனிநூல்களும் கட்டுரைகளும் இதற்குச் சான்று. இவையேயன்றி நூலாசிரியர் பிறர்க்கு வழங்கிய அணிந்துரை மற்றும் மதிப்புரைகளிலும் அவரின் புலமைத்தெறிப்புக்களைக் காணலாம். அவை காரிருளில் நடப்பவனுக்குச் சட்டெனத் தோன்றி மறையும் மின்னலின் வெட்டைப் போல வழி காட்டுபவை.

**ஒரு சோற்றுப்பதமாக ஓர் எடுத்துக்காட்டு:**

கம்பராமாயணம் - அண்ணாமலைப் பதிப்புக்கு (யுத்தகாண்டம் ஆறாம் பாகம், 1970) அவர் வழங்கிய ‘நன்றியுரை’யில் (ப.VIII) கம்பன் கையாண்ட, ‘திருத்தும்’ என்னும் சொல்லுக்குத் திருமங்கையாரின் ‘திருத்தாய் செம்போத்தே’

என்னும் பாசுரம் கொண்டு விளக்கம் தந்திருப்பதும் அதனடியாகச் சிறந்த பாடம் இன்னது என அறுதியிட்டிருப்பதும் அவரின் திறமான புலமைக்குச் சான்றாவன.

இப்படிப் பழமை ஊற்றமும் புதுமை நாட்டமும் கொண்டிருந்த மாணிக்கனார், பாட்டுத்திறன் படைத்தவராகவும் விளங்கினார். ஒருமுறை நாடறிந்த பெருங்கவிஞர் **சிற்பி** அவர்களிடம் கவிஞர் **பாலா** அருகிருக்க, அத்திறன் குறித்து நான் சொன்னதை இங்குக் குறிப்பது தவறாகாது.

" 'வசுபமா' கவிஞரல்லர்; ஆனால் அவர் கவிதை எழுதியிருக்கிறார்" என்னும் குறிப்புத்தான் அது.

'உரை'யில் அதாவது எழுத்தில் தனிநடை, தனிச்சுவை காட்டியவர் மாணிக்கனார். படைத்தவன் பழத்தினில் இனிப்பினைச் சேர்த்தது போலப் பாட்டிலும் அவர் கனிச்சுவை காட்டினார். அத்திறத்தினை மட்டும் இங்குச் சுருங்கச் சுட்டுவோம்.

**ஆர்வப்பாட்டு**

பாட்டுக்குச் சொல்லப்படும் இலக்கணம் யாது? தானாக எழுகிற அகத்தூண்டுதலின் வெளிப்பாடாக வழிந்தோடுவதே (Spontanious outflow) கவிதை என்பர் மேனாட்டறிஞர்.

> **உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
> **உருவெடுப்பது கவிதை**
> **தெள்ளத்தெளிந்த தமிழில் - உண்மை**
> **தெரிந்துரைப்பது கவிதை**

என்பார் நம் கவிமணி. உணர்ச்சியின் அடியாகவே இன்பம் உருவெடுக்கும். எனவே உணர்ச்சியும் உண்மையும் கவிதைக்கு இரு சிறகுகளாயின. இதனினும் சுருக்கமாக எட்டாம் நூற்றாண்டிலேயே பாட்டுக்கு இலக்கணம் சொன்னார் ஒருவர்.

> **"ஆர்வத்தால் பாடாதார் பாட்டு என்றும்**
> **பாட்டல்ல கேட்டாமே"**

என்பது அவர்கூற்று. ஆர்வப்பாட்டே பாட்டு; அவ்வார்வம் இன்றேல், என்றுமே அது பாட்டாகாது என்பது அவர் துணிபு.

யார் அவர்?

அவர் தாம், 'தமிழநன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்' செய்த திருமங்கையாழ்வார்.

நம் மாணிக்கனாரும் அத்தகைய ஆர்வப் பாட்டினரே. அதனால் தான் பெரும்பாலும் அவர் 'செய்தவை செய்யு'ளாகாமல் உணர்ச்சிக் கவிதைகளாயின. ஒருமுறை வாய்விட்டுப்படித்தோர் மனத்திலும் படிந்து நின்று, பக்கம் நின்று கேட்போர் நெஞ்சையும் கிறங்கடித்தன.

சான்று, டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு 'அன்புறை' (உறை-காணிக்கை)யாக அவர் பாடிய பாடல்கள்.

**‘தமிழ்க்காதல்’** தந்த நம் மாணிக்கனார்க்கு **உ.வே.சா.** மீது தனிக்காதல் உண்டு. அவரைப் **‘பதிப்பின்வேந்து’** என்று மதிப்பிட்டவர் அவர். ‘அவரின்றேல் பண்டைத்தமிழ் நூல்கள் இல்லை; தமிழரின் நனிநாகரிகம் பற்றி இவ்வுலகம் அறியவும் வாய்ப்பில்லை’ என்னும் கருத்தினர். ‘இன்றைய தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தமிழ்க்காப்புக்கும் - இனமான மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர் உ.வே.சா.’ என்று நினைக்கிறார். அந்த நினைவுத்தொடர்ச்சியால் நெஞ்சம் நெகிழ்கிறார். கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்கிறார். ‘பார்காக்கவும் பயிர்காக்கவும் பாலர் உயிர்காக்கவும் காலந்தோறும் ஆயிரமாயிரம் பேர் இருந்தார்கள். ஆனால் தமிழ்காக்க யார் இருந்தார்கள்?’ இப்படி மனச்சோர்வுடன் நினைக்கையிலேயே, ‘சாமிநாதனின் எழுச்சி’ அவர் கண்ணுக்குத் தெரிகிறது. கவிதையும் பிறக்கிறது:

**பார்காத்தார் ஆயிரம்பேர்; பசித்தார்க் காகப்**
**பயிர்காத்தார் ஆயிரம் பேர்; பாலர்க் காக**
**மார்காத்தார் ஆயிரம் பேர்; வாழ்ந்த நாட்டில்**
**மனம்காத்த தமிழ்த்தாய் ‘என் உடைமை எல்லாம்**
**யார்காத்தார்’ எனக் கேட்க ஒருவன், ‘அம்மா**
**யான்காப்பேன்’ எனவெழுந்தான் சாமிநாதன்**
**நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்**
**நிலைகாத்த மலையிமய நெற்றிமேலான்**

அடுத்து வரும்பாடல் அடிக்கரும்பாக - இன்னும் சுவையாக அமைகிறது. அடிக்கரும்பின் அடுத்தடுத்த மொழிகளைக் கடித்துச் சுவைக்கையில் மொழிக்கு மொழி தித்திப்பாவது போலப்பாடலின் அடிமேலடி சுவையேறி நிற்கிறது.

**பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி!**
**போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!**
**செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய!**
**சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்!**
**எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்**
**இளையாத உள்ளத்தால் எங்கும் சென்று**
**நெய்யாத தமிழ்நூல்கள் நிலைக்க வைத்த**
**நீங்காத தமிழ்க்குயிரே நின்தாள் வாழ்க!**

எங்கேனும் ‘மாணிக்கக்கல்’ கரைவதுண்டா? உ.வே.சா.வின் தமிழ்த்தொண்டில் உருகி உருகிக் கரைந்து நிற்கிறது நம் ‘மாணிக்கம்’.

நாயகனுக்குத் தலைப்பட்ட நாயகி போல் ‘சாமிநாத ஐயர்’ என்று அவர் பெயர் சொல்லவும் நாணி, ‘சாமி’ என்றும் ‘நாத’ என்றும் ‘ஐய’ என்றும் முதல்

இரண்டடிகளின் வெவ்வேறு சீர்களில் அச்சொற்களைத் தனித்தனி நிறுத்தி நிறுத்திச் சொல்லிப் பார்க்கிறார்; சுவைகாண்கிறார். நாமோ அவற்றைச் ‘சாமிநாத ஐயர்’ என்று முறையே சேர்த்துப்படித்து அழகு பார்க்கிறோம்.

மனமொழிமெய்களால் முற்றும் தமிழான – பெருந்தமிழன் நீ. இனத்தால் உன்னை வேறுபடுத்தி விலக்கிப்பார்க்கும் ‘சிறியமனம்’ எங்களுக்கில்லை - என்பதை அவர் வெளிப்படுத்தும் விதமே தனி.

**“சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்”**

என்பதிற் பொதிந்து கிடக்கும் பொருள் இதுவே. விரிவானம் போல் அவரின் விரிவான மனத்தைக் காட்டும் இடமிது. நிறைவாக,

“நீங்காத தமிழ்க்குயிரே நின்தாள் வாழ்க” என்று முடிக்கும்போது,

“தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே”

என்னும் திருநாவுக்கரசரின் தேவாரம் தான் நம் நினைவுக்கு வருகின்றது.

அது மட்டும் தானா? இதே ‘சாமி நாதப்புலவனுக்கு’ மகாகவி பாரதி பாடிய பாட்டொன்றும் கூடவே நம் நினைவில் ஓடுகின்றது.

**‘நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி**
**இன்பவகை நித்தந் துய்க்கும்**
**கதியறியோம்’ என்று மனம் வருந்தற்க**
**குடந்தைநகர்க் கலைஞர் கோவே!**
**பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்**
**காலமெலாம் புலவோர் வாயில்**
**துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்**
**இறப்பின்றித் துலங்கு வாயே!**

பாரதியின் இவ்வறுசீர் விருத்தப் பாடலோடு, நாம் முன்னர்க் காட்டிய வ.சுப.மாவின் எண்சீர் விருத்தப் பாடல்களை ஒப்பு நோக்குக; வாய்விட்டுப் படிக்க.

இப்போது மகாகவி பாரதிக்குப் பக்கத்தில் நம் மாணிக்கனார் வந்து நிற்பதைப் பார்க்கலாம்.

**மற்றுமொருசான்று**

இனி, மரபு – புதுமை இரண்டிலும் தடம் பதித்த **கவிஞர் மீராவின்** பாடலும் மூதறிஞர் மாணிக்கனார் பாட்டும் ஒத்து நடப்பதற்கு ஒரு சான்று காட்டுவோம்.

தென்றலும் நிலவும் போலப் பிறர்க்காக வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். எனவே தன்னால் மாநிலம் பயனுறுவதற்காகப் பராசக்தியிடம் வரம் கேட்டான் பாரதி. ‘உலகம் உண்ண உண் உடுத்த உடுப்பாய்’ என்றார் பாவேந்தரும். வாழையடி வாழையென வந்த பொதுமைச் சிந்தனை இது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த இளம் பெருவழுதியும் பிறர்க்கென முயல்வோர் வாழ்வதாலேயே இவ்வுலகம் வாழ்கிறது (புறநா.182)

என்றான். சான்றோர் கூட்டுறவால் நிலம் - தன் பாரத்தைத் தாங்குகிறது (990) என்றும் பண்புடையார் இருப்பதாலேயே உலகம் இருக்கிறது (996) என்றும் உறுதியாக நம்புகிறது வள்ளுவம். இத்தகைய சிந்தனைப் பள்ளியில் பயின்றவரே அறிஞர் வ.சுப.மா.வும், தமக்கென வாழாத இயற்கைப் பொருள்களின் இயல்பினை அவர் எண்ணுகிறார். இவ்வியல்புக்கு விலக்கான பொருள் ஒன்றும் கூட அவர் கண்ணிற்படவில்லை. எனவே பார்க்கின்ற பொருளிலெல்லாம் இந்த எண்ணமே மனத்திற்பட்டுப் பாட்டுப் பிறக்கின்றது.

**நல்லாவின் பால்முழுதும் கன்றுக் கில்லை;**
**நறும்பூவின் மணமுழுதும் சோலைக் கில்லை;**
**நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக் கில்லை;**
**நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக் கில்லை;**
**பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை;**
**பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக் கில்லை;**
**எல்லாமே பிறர்க்குழைக்கக் காணு கின்றேன்;**
**என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.**

வ.சுப.மா.வின் இக் கவிதை வாக்குமூலம் (Declaration) அவரின் பொதுமைச் சிந்தனையையும் அதன் மீது அவருக்கிருந்த தீரா வேட்கையையும் தெரிவிக்கின்றது. 'ஆவின்பால் முதலான யாவும் அடுத்தவர்க்கே' என்பதை அவர் அடுக்கிச் சொல்வது கவிதைக்கு அழகூட்டுகிறது. படிப்போரை மீண்டும் மீண்டும் வாய்விட்டுப் படிக்க வைக்கிறது. அது பற்றிச் சிந்திக்க வைக்கிறது. சிந்திப்போருள் சிலரேனும் செயல்படக் கூடுமன்றோ? அதுவே பாட்டின் பலன். அப்படி ஒரு பலன் கிடைத்தால், 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்த பெருமை' நம் மாணிக்கனார்க்கும் வந்து சேரும்.

இனி மீராவின் கவிதைக்கு வருவோம், பொதுவுடைமைப் பூவான ஜீவாவின் மறைவு குறித்த இரங்கற் பா அது.

**தனக்காகக் கார்மேகம் பொழிவ தில்லை;**
**தனக்காகச் சோழநதி பாய்வ தில்லை;**
**தனக்காகப் பூங்குயில்கள் இசைப்ப தில்லை;**
**தனக்காகச் செவ்வாழை செழிப்ப தில்லை;**
**தனக்காக இயற்கையிலே முகிழ்த்த ஒன்றும்**
**தழைப்பதில்லை; பிழைப்பதில்லை மனிதன் மட்டும்**
**தனக்காக வாழ்கின்றான் என்பர் ; அந்தத்**
**தரையுரையைப் பொய்க்கவைத்த சான்றோன் நீயே!**

**தாமரை - ஜீவா நினைவுமலர் (1965)**

மீரா நாடறிந்த பெருங்கவிஞர்; 'வசுபமா' — அறிஞர் போற்றும் பேரறிஞர். இவ்விருவரின் பாட்டும் உணர்ச்சி, கருத்து இரண்டாலும் ஒத்து நடப்பதைக்

காணலாம். ‘போலச் செய்தலாக’ இல்லாமல் தனித்தன்மையுடன் ஒன்றற்கொன்று அவை ‘இணை’யாக நிற்பதும் காண்க.

நாம் இது வரை பார்த்த மாணிக்கனார் பாடல்கள் உணர்ச்சிப் பெருக்குடையன.

**கருத்துச்செறிவு**

‘வ.சுப.மா’ அவர்கள் தம் - **வள்ளுவம்** என்னும் நூலில் (கற்பனைப் பொழிவுகள் - அவர் படைத்த புதிய இலக்கியவகை) தமையனார் திருப்பதி அவர்களுக்கு ‘அன்புறை’யாக இரண்டு வெண்பாக்கள் பாடியிருக்கிறார்.

**எங்கள் குலமுதல்வன்; இல்லாண்மை ஏற்றமகன்;**
**பொங்கல் மனைபோற் பொலிவுடையன்; - சங்கத்**
**தமிழனைய தூயன்; தனைமறந்த தொண்டன்;**
**கமழும் குடிமைக்கோர் காட்டு (1)**

**குடும்பக் களத்துக் குறிக்கோட் படையால்**
**இடும்பைப் புறங்கண்ட எம்முன் - நெடும் பொறையை**
**வள்ளுவ நூலகத்து வாழ்வெண்ணிக் கற்பவர்**
**கொள்ளுப நெஞ்சிற் குறித்து (2)**

இவ்விரு வெண்பாக்களும் குடிசெயல்வகை (103) குடிமை(96) இடுக்கணழியாமை(63) என்னும் திருக்குறள் அதிகாரக் கருத்துகளை உள்வாங்கிப் பாடப்பெற்றவை. அன்றியும்,

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும் (1023)**
**இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்**
**நல்லாள் இலாத குடி (1030)**

என்னும் குறப்பாக்களின் கருத்துச் செறிவாகவும் இவற்றைக் காணக்கூடும்.

முதல் வெண்பாவில் இடம்பெறும் ‘இல்லாண்மை’ வேறெங்கும் காணப் பெறாத ஒன்று; இவரின் புதிய சொல்லாக்கம். குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் வலிமைக்கு இவர் சூட்டிய புதிய பொன் மகுடம் அது.

ஒன்றை மட்டும் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும் ஆசிரியன், தனது நூலை - தன் மனம் உகந்தவர்க்குக் காணிக்கையாக்குவது புதுவதன்று; இயற்கையே. மகன் தந்தைக்கும் மாணாக்கன் ஆசிரியற்கும், ‘அன்புறை’யாக்குவது போலத் தமையனுக்குத் தம்பி(ன்) செய்த காணிக்கை இது வாசகர்க்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்று நாம் நினைக்கலாம். நுட்பமாக நோக்கின் மற்றவர் போலன்றிப் படிப்பவர்க்கும் நூலுக்கும் ஒரு தொடர்பு காட்டுகிறார் மாணிக்கனார். அத்தொடர்பு, நூலைக் கற்போரையும் சேர்த்துப்

பிணிப்பது; குழந்தைக் கண்ணனை உரலோடு பிணித்த 'கண்ணிநுண் சிறுத்தாம்பி'னைப் போன்றது.

இரண்டாம் வெண்பாவில், "வாழ்நெறி காட்டுவது வள்ளுவம்; அந்த நெறியின் நீங்காது வாழ்ந்து காட்டி, இடுக்கண்களை ஏற்றுக் குடும்பபாரத்தைச் சுமந்தவர் அண்ணன் திருப்பதி. எனவே இந்நூலினைக் கற்பார் அவரது நெடும் பொறையை (பெரும்பாரத்தைத் தனியொருவனாய் ஏற்று நின்றதை) நெஞ்சிற்குறிக் கொள்வாராக! கொண்டால் அவர் தம் வாழ்வு சிறக்கும்" என்னும் குறிப்பினைத் தருகிறார். தமையன் - தம்பி உறவுப்பாட்டாக இல்லாமல், ஆசிரியர் - வாசகர் உறவையும் சேர்த்துக் காக்கும் கருத்துச் செறிவே இதன் சிறப்பு எனலாம்.

## முடிவுரை

'தமிழ்க்காதல்', 'வள்ளுவம்' ஆகிய இருபெருநூல்களின் 'அன்புறை'ப்பாடல்களே இங்கு எடுத்துக் காட்டப்பட்டன. 'கொடைவிளக்கு' முதலான அவரின் ஏனைய பாட்டுப் பனுவல்கள் விரிவஞ்சி இங்குப் பேசப் பெறவில்லை. ஆழ்ந்து கற்பார், அவற்றிலும் 'மாணிக்கப்பரல்'களைக் கண்டு மகிழலாம்.

**தொடர்புக்கு:**

**ம.பெ.சீனிவாசன்**
எஸ் 2, வரதா டீலக்ஸ்,
வசுதாரா வளாகம்,
ஆண்டாள்புரம், மதுரை 625003,
பேசி: 98424 36640.